# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண்கள் 5/2011 & 92/2016

வாதிதரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சம்சுல் ஆ:ரிப் இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர் கருப்பசாமி வா.சா.1 | சாதி |
| த/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---

முதல் விசாரணை 15-10-2022.

நான் அசல் வழக்கு எண் 5/2011 மற்றும் அசல் வழக்கு எண் 92/2016 வழக்கிலும் வாதி ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

11-10-1940 தேதியில் தபசில் 1ம் லக்க சொத்திற்கு ராமலிங்க சன்னியாசி பெயரில் உள்ளகிரையப் பத்திரத்தின் SRO நகல். வாசா.ஆ.1 17-02-2017ம் தேதியிட்ட தபசில் 1ம் லக்க சொத்திற்கு ராமலிங்கம் சன்னியாசி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும், 05-01-2017ம் தேதியிட்ட தபசில் 2ம் லக்க சொத்திற்கு குருவம்மாள் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகும். 3-12-1957ம்தேதியிட்ட தபசில் 2வது லக்க சொத்தினை குருவம்மாள் என்பவரிடமிருந்து ராமலிங்க சன்னியாசி கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரத்தின் SRO நகல். வா.சா.ஆ.4 ஆகும், 23-01-1950 தேதியில் தபசில் சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களைப் பொறுத்து இராமலிங்க சன்னியாசி என்பவர் எழுதி வைத்துள்ள இனாம் செடடில்மெண்ட் பத்திரத்தின் SRO நகல். வா.சா.ஆ.5 ஆகும். தபசில் சொத்தில் வாடகை தாரராக இருந்து வருகின்ற குமாரவேல் பெயரில் உள்ளமின் கட்டண ரசீது 5 எண்ணிக்கை அசல் வா.சா.ஆ.6 ஆகும். 2000-2001 மேற்படி குமாரவேலு பெயரில் உள்ள தொலைபேசி இணைப்பிற்கான ரசீதுகள் இரண்டு எண்ணிக்கை அசல்

வா.சா.ஆ.7 ஆகும். 09-10-2015ம் தேதியில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 283/13ல் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆகும். அசல் வழக்கு எண் 83/13 வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆகும். 2012-2016ம் ஆண்டுக்கான குருபூஜை அழைப்பிதழ்கள் 5 எண்ணிக்கை அசல் வா.சா.ஆ.10 ஆகும். 23-02-2016ம் தேதியில் வழக்கின் தபசில் சொத்துக்களைப் பொறுத்து 1ம் பிரதிவாதி, முத்துப்பாண்டி மற்றும் சீராளன் ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் SRO நகல் வா.சா.ஆ.11 ஆகும். வாதி மடத்தின் தீர்மானப் புத்தகத்தின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்கள் வா.சா.ஆ.12 ஆகும். இராமலிங்க சன்னியாசி என்பவரின் குருபூஜை மற்றும் அன்னதான புகைப்படங்கள் 15 எண்ணிக்கை குறுந்தகடுடன் கூடியது வா.சா.ஆ. 13 ஆகும். வாதியின் ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.14 ஆகும். அசல் வழக்கு எண் 5/2011 மற்றும் அசல் வழக்கு எண் 92/2016 வழக்குகளில் பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.